# அலகுத்தேர்வு : இயல் - 7

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண் : 25**

## I. சரியான விடையைத் தேர்தெடுத்து எழுதுக. $4 \times 1 = 4$

1. கலைக்கூட்டமாகக் காட்சி தருவது
   அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்
2. காந்தியடிகள் __________ அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்.
   அ) நாமக்கல் கவிஞர் ஆ) பாரதிதாசன்
   இ) உ.வே.சாமிநாதர் ஈ) பாரதியார்
3. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) நூல் + ஆடை ஆ) நூலா + டை இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆடை
4. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் __________.
   அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

## II. பொருத்துக. $4 \times 1 = 4$

5. இலக்கிய மாநாடு - பாரதியார்
6. தமிழ்நாட்டுக் கவிஞர் - சென்னை
7. குற்றாலம் - ஜி.யு.போப்
8. தமிழ்க் கையேடு - அருவி

## III. கீழ்க்கானும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. $5 \times 1 = 5$

9. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.
10. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்.
11. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.
12. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.
13. அது ஒரு இனிய பாடல்.

## IV. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும். $3 \times 2 = 6$

14. இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.
15. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.
16. சொல் என்றால் என்ன?
17. பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?

## V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும். $2 \times 3 = 6$

18. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.
19. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.
20. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.

*******